# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## இந்து தர்மாசிரியர் பரீட்சை – 2026

01. 2026 ஆம் வருடத்திற்கான இந்து தர்மாசிரியர் பரீட்சைக்கென பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள அதேவேளை பரீட்சை 2026 நவம்பர் மாதம் நடாத்துவதற்கு நடவடிக்ககைகள் மேற்கொள்ளபட்டுள்ளன என்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. **பரீட்சை நிலையங்கள் :-**

இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து மாவட்டங்களிலும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கைக்கேற்ப பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும். எனினும், குறித்த மாவட்டத்தில் போதியளவு விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பங்களில், அம்மாவட்டத்தின் பரீட்சை நிலையம் இரத்துச்செய்யப்பட்டு குறித்த விண்ணப்பதாரிகள், அதற்கு அருகில் அமைக்கப்படும் வேறொரு பரீட்சை நிலையத்திற் தோற்றுமாறு கோரப்படுவார்.

03. **மொழிமூலம் :-**

இப்பரீட்சை தமிழ்மொழியில் மாத்திரம் நடாத்தப்படும்.

04. **தகைமை :-**

இப்பரீட்சைக்கென விண்ணப்பிக்கும் ஒவ்வொரு விண்ணப்பதாரியும் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுள் ஏதேனும் ஒரு தகைமையேனும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

4.1 அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ்ப் பரீட்சையிற் சித்தி பெற்றிருத்தல்.

4.2 பண்டிதர் பட்டம் பெற்றிருத்தல்

4.3 சைவப்புலவர் பட்டம் பெற்றிருத்தல்

4.4 கல்விப் பொதுத்தராதர (உயர்தரப் பத்திர) பரீட்சையில் இந்துசமயம், இந்துநாகரீகம் என்பவற்றுள் ஏதேனும் ஒன்றை ஒரு பாடமாகக் கொண்டு சித்திபெற்றிருத்தல்.

4.5 சைவநெறிப் பாடத்தில் திறமைச் சித்தியும் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு** : இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மேற்குறித்த 4 ஆம் பிரிவிற் குறிப்பிட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளார் என அறநெறிப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

05. **விண்ணப்பித்தல்**

5.1 விண்ணப்பதாரி ஒருவருக்கு, வெளிவாரி விண்ணப்பதாரியாகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்படமாட்டாது. எனினும், 4 ஆம் பிரிவிற் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுள் ஏதேனும் ஒன்றைக்கொண்டுள்ள விண்ணப்பதாரி ஆயின், தாம் வசிக்கும் இடத்திற்கு அருகிலுள்ள அறநெறிப் பாடசாலை ஒன்றினூடாக பரீட்சைக் கட்டணமாக ரூபா 200.00 ஐச் செலுத்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்க முடியும். இது தொடர்பான அனைத்து அறிவுறுத்தல்களும் அறநெறிப் பாடசாலைத் தலைமை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

5.2 குறித்த அறநெறிப் பாடசாலைத் தலைமை ஆசிரியர்கள் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இவ் விண்ணப்பப்படிவங்கள் தபால் மூலம் அறநெறிப் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

5.3 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் ……………….. ஆகும்.

5.4 விண்ணப்பப் படிவங்களில், விண்ணப்பதாரிகளின் பெயர்களை உள்ளடக்கும்போது, பிறப்புச் சான்றிதழிற் பதிவிடப்பட்டுள்ளவாறே பெயர்கள் அமைய வேண்டும் என்பதோடு, பெறுபேறுகள் வழங்கப்பட்ட பின்னர் பெயர்களை திருத்துமாறு கோரப்படும்போது அச்சுப்பிழைகள் தவிர்ந்த

வேறு கோரிக்கைகள் தொடர்பாக கவனஞ் செலுத்தப்படமாட்டாது. விண்ணப்பப் படிவங்கள் தெளிவாகவும், பிழையின்றியும் பூரணப்படுத்தப்படல் வேண்டும். அவ்விதம் அமையாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

5.5 அறநெறிப் பாடசாலையின் கணினி இலக்கம், மற்றும் முகவரி என்பன பிழையின்றிக் குறிப்பிடப்படுவதோடு, அறநெறிப் பாடசாலையின் முகவரியில் மாற்றம் இருப்பின் அதனை அறியத் தருவதோடு, அறநெறிப் பாடசாலையின் தலைமையாசிரியருடன் தொடர்பு கொள்ளத்தக்க தொலைபேசி இலக்கமொன்றும் குறிப்பிடப்பட வேண்டும்.

5.6 விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல் தொடர்பாகவும், தகைமை கொண்டுள்ளமை தொடர்பாகவும், விண்ணபப்படிவத்தை உறுதிப்படுத்தும் அறநெறிப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் உறுதிப்படுத்த அல்லது பொறுப்பேற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

## 06. பரீட்சைக் கட்டணம்:

இப்பரீட்சைக்குரிய கட்டணம் ரூபா **200.00** ஆகும். ஆயினும், முதற்தடவையாக இப் பரீட்சையிற் தோற்றுபவர்களுக்கு இக்கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்படும். நூனசித்தி பாடத்தைப் பூரணப்படுத்திக் கொள்வதற்கான கட்டணம் ரூபா **50.00** ஆகும்.

6.1 குறித்த அறநெறிப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்துவதற்குரிய அனைத்து விண்ணப்பதாரிகளின் முழுத்தொகையையும், இலங்கைப்பரீட்சைத் திணைக்களத்தின் வருமானத்தலைப்பு இல 20-03-02-13 இற்குச் செலுத்தத்தக்கதாக, நாட்டின் எந்தவொரு தபால் நிலையத்திலும் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக்கொள்வதோடு, அதனை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பிவைத்தல் வேண்டும். (பற்றுச் சீட்டின் புகைப்படப் பிரதி ஒன்றைப் பேணிக்கொள்வது பயனளிப்பதாகும்) எக் காரணத்தைக் கொண்டும் இப்பரீட்சைக்கெனச் செலுத்தப்பட்ட கட்டணம் வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ அல்லது மீளப்பெறவோ இயலாததாகும்.

## 07. அனுமதி அட்டை:

பரீட்சைக்கு இணைத்துக் கொள்ளப்படும் ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயத்தின் மூலம் அனுமதிஅட்டை உரிய அறநெறிப் பாடசாலை அதிபர் ஊடாக விநியோகிக்கப்படும்.

7.1 பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரிகளும், தாம் முதலாவதாகப் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்திலேயே தமக்குரிய அனுமதிஅட்டையில், தமது ஒப்பத்தைச் சான்றுப்படுத்திக் கொண்டு பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்க வேண்டும். எவரேனும் விண்ணப்பதாரி ஒருவர், தமது அனுமதிஅட்டையை ஒப்படைக்காது இருப்பின் அல்லது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தனால் தமக்கென நியமிக்கப்பட்டிருந்த பரீட்சை நிலையம் தவிர்ந்த வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றியிருப்பின் அவ்விண்ணப்பதாரியின் பரீட்சை விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதிஅட்டையில் விண்ணப்பதாரியின் கையொப்பம், இந்து அறநெறிப் பாடசாலை தலைமை ஆசிரியர் மூலம் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு 07 தினங்களுக்கு முன்னர் அனுமதிஅட்டை கிடைக்காதிருப்பின் உரிய அறநெறிப் பாடசாலைத் தலைவர் மூலம் அது தொடர்பாக, தாமதமன்றி பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு அறிவிக்கப்பட வேண்டும். அத்தகைய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் அனுப்பிய பதிவுச்சிட்டையின் பிரதியுடன் கீழ்க்குறித்த விபரங்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.

1. பரீட்சையின் பெயர் :
2. அறநெறிப் பாடசாலையின் பெயர் :
3. அறநெறிப் பாடசாலையின் முகவரி :
4. அறநெறிப் பாடசாலையின் கணனி இலக்கம் :

5. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் முகவரி :
6. விண்ணப்பதாரியின் முகவரி :
7. விண்ணப்பதாரியின் தொலைபேசி இலக்கம் :
8. அறநெறிப் பாடசாலை அதிபரின் தொலைபேசி இலக்கம் :
9. விண்ணப்பித்த பரீட்சை நிலையம் / மாவட்டம் :

**08. ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**

பரீட்சார்த்தி, பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்திப்படத்தக்கவாறான தமது ஆளடையாளத்தை நிரூபித்துக் கொள்ள வேண்டும். அதற்கென கீழ்க்குறித்த ஏதேனும் ஒரு ஆவணம் ஏற்றுக் கொள்ளப்படும்.

8.1 தேசிய அடையாள அட்டை
8.2 செல்லுபடியான கடவுச்சீட்டு
8.3 செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்

அவ்வாறே, விண்ணப்பதாரிகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளத் தக்கவாறு, முகம் மற்றும் இரு காதுகளையும் மறைத்துக்கொள்ளாதவாறு பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். அங்ஙனம் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை நிலையத்தினுள் உட்செல்ல அனுமதிக்கப்படமாட்டார். மேலும், பரீட்சை நிலையத்தினுள் உள்நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை முடிந்து வெளியே செல்லும்வரை பரீட்சை மேற்பார்வையாளர் பரீட்சார்த்தியை அடையாளங்கண்டு கொள்ளத்தக்கவாறு முகம் மற்றும் இரு காதுகளை மறைப்பதிலிருந்தும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

**09. சித்தி தொடர்பாகத் தீர்மானித்தலும் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடலும்:**

இப்பரீட்சைக்குரிய பாடங்கள் ஐந்து ஆகும். பரீட்சையிற் சித்திபெறுவதற்கு ஒவ்வொரு பரீட்சார்த்தியும் குறித்த ஐந்து பாடங்களிலும் சித்திபெற வேண்டும். எனினும், ஒரே தடவையில் ஐந்து பாடங்களில் ஏதாவது ஒரு பாடத்தில் மட்டும் சித்தி பெறத் தவறுவோர் நூன சித்தி பெற்றோராகக் கருதப்படுவர். இத்தகைய பரீட்சார்த்திகள், பரீட்சைக்குத் தோற்றிய வருடத்திலிருந்து தொடர்ந்துவரும் மூன்று தடவைக்குள் நூன சித்திபெற்ற பாடத்திற்குத் தோற்றி, அக்குறித்த பாடத்தில் சித்தி பெறுவதன் மூலம் பெறுபேற்றினைப் பூரணப்படுத்திக் கொள்ள முடியும். நூன சித்திபெறும் பரீட்சார்த்திகள், தமது சித்தியைப் பூரணப்படுத்திக் கொள்ள கட்டாயமாக நூன சித்தி பெற்ற பாடத்திற்காக மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். நூன சித்திக்கென விண்ணப்பிக்கும்போது, ஏனைய பாடங்களுக்காகத் தோற்றிய வருடம், பரீட்சை இலக்கம், தோற்றிய பாடங்கள், பெற்ற தரம் என்பவை குறிப்பிடப்படல் வேண்டும்.

9.1 ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய வினாப்பத்திரத்திற்கு 100 புள்ளிகள் வழங்கப்படுவதோடு சித்திபெறும் தரத்திற்கு உரிய புள்ளி வரம்புகள் மற்றும் குறியீடுகள் கீழ்வருமாறு:

| புள்ளிவீச்சு | தரம் | குறியீடு |
|---|---|---|
| 0-34 | சித்தியின்மை | F |
| 35-54 | சித்தி | S |
| 55-69 | திறமைச்சித்தி | C |
| 70-100 | விசேட திறமைச்சித்தி | D |

9.2 பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளின் பட்டியல், குறித்த அறநெறிப் பாடசாலை அதிபருக்குத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

**10. சான்றிதழ் :**

இப்பரீட்சைக்குத் தோற்றி சித்திபெறுகின்ற ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உரிய சான்றிதழ்கள் இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் மூலம் அறநெறிப் பாடசாலை அதிபருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். மேற்படி பரீட்சைக்குத் தோற்றி சித்திபெற்றபோதும் சான்றிதழ் கிடைக்கப் பெறாத பரீட்சார்த்தி ஒருவர், அறநெறிப் பாடசாலை அதிபர் மூலமாக,

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,**
**நிறுவனம் சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை, பத்தரமுல்லை.**

எனும் முகவரிக்கு அறிவித்து விபரத்தினைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

**11. விடைத்தாள் மீள்பரிசீலனை செய்தல்**

பரீட்சைத் திணைக்கள இணையத்தளத்தில் பரீட்சை முடிவுகள் வெளியாகி 14 தினங்களுக்குள் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்படும் படிவங்கள் மூலம் இந்து அறநெறிப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் / பொறுப்பாசிரியர் கோரியிருப்பின் விடைத்தாள் மீளாய்வு செய்வதற்கு வாய்ப்பளிக்கப்படும். இதற்கான கட்டணத் தொகை ஒவ்வொரு தடவையிலும் மாற்றம்பெற வாய்ப்பு உள்ளது. எக்காரணத்தை முன்னிட்டும், பரீட்சார்த்திகளுக்கோ அன்றி அவர்களது பிரதிநிதிகளுக்கோ விடைத்தாள்களை சோதித்தறிய வாய்ப்பளிக்கப்படமாட்டாது.

**12. பாடத்திட்டம்:**

இப்பரீட்சை ஐந்து வினாத்தாள்களைக் கொண்டது. ஓவ்வொரு வினாத்தாள்களும் மூன்று மணித்தியாலங்கள் கொண்டதாக அமையும். வினாப்பத்திரங்கள் பின்வருமாறு

1. வேதங்களும் ஆகமங்களும்
2. சமய ஞானிகளும் சமயப் பெரியார்களும்
3. சைவசமய வரலாறு
4. பன்னிரு திருமுறைகள்
5. கோயில்களும் கலைகளும்

ஓவ்வொரு வினாப்பத்திரங்களும் பகுதி I, பகுதி II, பகுதி III என அமையும்.

பகுதி I இல் மொத்தமாக இருபது வினாக்கள் கொடுக்கப்படும். இருபது வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும். ஒரு வினாவிற்கு இரண்டு புள்ளி வீதம் மொத்தம் நாற்பது புள்ளிகள் வழங்கப்படும். (20 x 2 = 40)

பகுதி II, இல் நான்கு வினாக்கள் கொடுக்கப்படும். அதில் விரும்பிய ஏதாவது இரண்டு வினாக்களைத் தெரிவு செய்தல் வேண்டும். மொத்தமாக முப்பது புள்ளிகள் வழங்கப்படும். (15 x 2 = 30)

பகுதி III, இல் நான்கு வினாக்கள் கொடுக்கப்படும். அதில் விரும்பிய ஏதாவது இரண்டு வினாக்களைத் தெரிவு செய்தல் வேண்டும். மொத்தமாக முப்பது புள்ளிகள் வழங்கப்படும். (15 x 2 = 30)

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்படவுள்ள இந்து தர்மாசிரியர் சான்றிதழ் பத்திரப் பரீட்சைக்குரிய பாடத்திட்டம் இவ் அறிவித்தலின் இறுதியில் இணைப்பு - 2 இல் காட்டப்பட்டுள்ளது.

**13.** இந்நிபந்தனைகள் மற்றும் பாடத்திட்டத்திற் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்பச் செயற்படுவதற்கு அனைத்துப் பரீட்சை விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டிருக்கும் அதேவேளை,

இந்நிபந்தனைகளிற் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அவை , பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிவிற்கேற்பத் தீர்மானிக்கப்படுவனவாகும்.

**14.** தமிழ்மொழி மூலம் மாத்திரமே அறிவுத்தல்கள் வெளியிட்ப்படும் அறிவித்தலுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஏ. கே. எஸ். இந்திகா குமாரி லியனகே
பரீட்சை ஆரைணயாளர் நாயகம்.

2026 ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதியன்று
பத்தரமுல்ல, பெலவத்த
இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தில்,

**இணைப்பு – 01**

| மாவட்ட / நகர இலக்கம் | மாவட்டம் / நகரம் |
|---|---|
| 01 | கொழும்பு |
| 02 | கம்பஹா |
| 03 | களுத்தறை |
| 04 | கண்டி |
| 05 | மாத்தளை |
| 06 | நுவரேலியா |
| 07 | காலி |
| 08 | மாத்தறை |
| 09 | ஹம்பாந்தோட்டை |
| 10 | யாழ்ப்பாணம் |
| 11 | மன்னார் |
| 12 | வவுனியா |
| 13 | முல்லைத்தீவு |
| 14 | கிளிநொச்சி |
| 15 | மட்டக்களப்பு |
| 16 | அம்பாறை |
| 17 | திருகோணமலை |
| 18 | குருநாகல் |
| 19 | புத்தளம் |
| 20 | அநுராதபுரம் |
| 21 | பொலன்னறுவை |
| 22 | பதுளை |
| 23 | மொனராகலை |
| 24 | இரத்தினபுரி |
| 25 | கேகாலை |

**இணைப்பு – 02**

**இந்து தர்மாசிரியர் பரீட்சை**

**வினாப்பத்திரம் 1 ற்கான பாடத்திட்டம்**

## வேதங்களும் ஆகமங்களும்

இந்து சமயத்துக்கு மூலாதாரங்களான வேதங்கள், ஆகமங்கள் என்பவற்றைப் பற்றியதாக இவ் வினாப்பத்திரம் அமையும். கீழ்வரும் விடயங்கள் முக்கியமானவை.

1. வேதங்களும் அவற்றின் பிரிவுகளும் : சங்கிதை, பிரமாணம், ஆரண்யகம், உபநிடதம்
2. வேதகால ரிஷிகளும், முனிவர்களும்
3. வேதங்கள் வர்ணிக்கும் தேவர்கள்
4. வழிபாட்டு முறைகள்.

5. வேதங்களில் ஒழுக்கம், நீதி பற்றிய சிந்தனைகள
6. வேதகாலச் சமுதாயம்
7. வேதங்களும், இந்து சமயக் கிரியைகளும், சடங்குகளும்
8. உபநிடதச் சிந்தனைகள் : பிரம்மம், ஆத்மா, வினைப்பயன், மறுபிறப்பு
9. ஆகமங்களின் விளக்கமும் பொருளடக்கமும்
10. ஆகமங்களும் ஆலய வழிபாடும்

**வினாப்பத்திரம் 2 ந்கான பாடத்திட்டம்**

**சமய ஞானிகளும் சமயப் பெரியார்களும்**

இந்து சமயத்தின் நெடுங்கால வரலாற்றில் உள்ள பல்வேறு கட்டங்களில் அதனை அபிவிருத்தி செய்வதிலும் மேன்மைப்படுத்துவதிலும் பங்குகொண்ட ரிஷிகள், ஞானிகள், பாவலர்கள், தத்துவதரிசிகள் சமய இலக்கியங்களின் தலைவர்கள் முதலியோரைப் பற்றிய தெளிவான அறிவைப் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ளுமாறு செய்வதே இப்பாடத்தின் குறிக்கோளாகும். கீழ்வரும் விடயங்கள் சிறப்பான கவனத்தைப்பெறும்.

1. ஆதி சங்கரர்
2. இராமானுஜர்
3. மத்துவாச்சாரியாரும், அவரது சிந்தனைகளும்
4. ஸ்ரீ சைதன்யர், துளசிதாசர்
5. இராமானந்தர் , கபீர்தாஸர், மீராபாய்
6. இராஜாராம் மோகன் ராயும், பிரம்மசமாஜமும்
7. சுவாமி தயானந்தரும், ஆரிய சமாஜமும்
8. இராமகிருஷ்ணர்
9. சுவாமி விவேகானந்தர்
10. சுவாமி சின்மயானந்தரும், சின்மயா இயக்கமும்

**வினாப்பத்திரம் 3 ந்கான பாடத்திட்டம்**

**சைவசமய வரலாறு**

தென்னாசியா, தென்கிழக்காசியா என்பவற்றிலுள்ள சைவசமய வரலாறு பற்றி பரீட்சார்த்திகளிடமிருந்து ஒரு அறிவுபூர்வமான , தெளிவான விளக்கம் எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்விரு பிராந்தியங்களிலும் உள்ள அரசியல், சமூக, பண்பாட்டு மாற்றங்களோடு தொடர்புபடுத்திச் சைவசமய வளர்ச்சியைப் படித்தல் வேண்டும். தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் ஏற்பட்ட சைவசமய வளர்ச்சிகள் விசேட கவனத்தைப்பெறும். இலக்கியம், சாசனங்கள், பண்பாட்டுச்சின்னங்கள் என்பவற்றின் அடிப்படையிலே சமய வளர்ச்சிகளை விளக்குதல் வேண்டும்.

பாடவிதானத்தில் கீழ்வரும் விடயங்கள் மிக முக்கியமான அம்சங்களாகும்.

1. இதிகாச புராணங்களில் சைவம்
2. ஆதிகால தமிழர் சமுதாயத்தில் சைவம்
3. பல்லவர் காலத்துப் பக்தி நெறி
4. சோழர் காலத்திற் சைவசமயம்
5. காஷ்மீர் சைவம்
6. வீர சைவம்
7. சைவசித்தாந்த சாஸ்திரங்கள்
8. ஆதீனங்களின் சமயப்பணி
9. ஆறுமுக நாவலரும், சைவசமய மறுமலர்ச்சியும்
10. சுவாமி விபுலானந்தரும் இலங்கையில் இராமகிருஸ்ண இயக்கமும்

**வினாப்பத்திரம் 4 இற்கான பாடத்திட்டம்**

**பன்னிரு திருமுறைகள்**

இப் பாடத்திலே பன்னிரு திருமுறைகளில் விளக்கப்படும் சைவசமய சிந்தனைகள் , ஆன்மீக அனுபவங்கள் சமய தத்துவங்கள் என்பவற்றில் விசேட கவனம் செலுத்தப்படும். பண்ணிசையின் வளர்ச்சி,

கோயில்கள் அவற்றின் இயற்கைச்சூழல், அவற்றின் சமுதாயப்பின்னணி என்பன பற்றிய தெளிவான விளக்கம் அவசியமானது.

கீழ்வரும் விடயங்கள் மிகுந்த கவனத்திற்குரியவை.

1. பன்னிரு திருமுறைகளின் தொகுப்பும், அவற்றின் அடங்கன் முறையும்
2. நாயன்மார் வரலாறு
3. திருமுறைகளில் முப்பொருள்
4. திருமுறைகளிற் கோயில் வழிபாடு
5. பெரியபுராணம்
6. வினைப்பயனும் விமோசனமும்

**வினாப்பத்திரம் 5 இற்கான பாடத்திட்டம்**

## கோயில்களும் கலைகளும்

இப்பாடத்திலே கோயில்கள் தொடர்பான கட்டடக்கலை, சிற்பக்கலை, நடனக்கலை, இசைக்கலை, ஓவியக்கலை என்பவற்றில் விசேட கவனஞ் செலுத்தப்படும். பரீட்சார்த்திகள் இக்கலைகள் தொடர்பான சாஸ்திர நூல்களைப் பற்றியும் கோயிலமைப்புகள், பண்பாட்டுச் சின்னங்கள் என்பன பற்றியும் தெளிவான விளக்கம் பெற்றிருக்க வேண்டும். நாகரம், வேசரம், திராவிடம் என்னும் கலைப்பாணிகளைப் பற்றிய விளக்கம் அவசியமானது.

கோயில்களும் கலைகளும் என்னும் பாடம் பற்றிய வினாப்பத்திரம் கீழ்வரும் அம்சங்களை உள்ளடக்கியதாக அமையும்.

1)சிற்ப சாஸ்திரம் 2) நாட்டியசாஸ்திரம் 3)ஓவிய நூல் 4) இசைநூல்கள் 5)பண்பாட்டுச் சின்னங்கள்

**கட்டடக் கலை**

(1) கோயிலமைப்பின் பிரதான அம்சங்களும், அவற்றின் வளர்ச்சிகளும்
(2) பல்லவர் காலத்துக் கோயில்களும், சிற்பங்களும்
(3) சோழர் காலத்திற் திராவிட கலைப்பாணி
(4) விஜயநகர, நாயக்கர் காலத்துக் கோயில்கள்

**சிற்பக் கலை**

(1) கடவுட் படிமங்கள்
(2) தேவகோட்டச் சிற்பங்கள்
(3) கதைகளை விளக்கும் சிற்பங்கள்
(4) துவாரபாலகர் சிற்பங்கள்
(5) மனிதரின் உருவச் சிற்பங்கள்
(6) சமய குரவரின் படிமங்கள்
(7) அலங்கார வேலைப்பாடுகள்

**நடனக்கலை**

(1) பரதம், கதக்களி, கதக், யக்ஷகானம், குச்சுப்புடி, ஒடிஸி, மணிப்புரி ஆகிய நாட்டிய மரபுகள்
(2) கோயிற் சிற்பங்களும் நாட்டிய கரணங்களும்
(3) பரத நாட்டியத்தின் வரலாறும் நவீனகால வளர்ச்சிகளும்

**ஓவியக் கலை**

(1) ஓவியங்களும் கலைக் கோட்பாடுகளும்
(2) அஜந்தா ஓவியங்கள்
(3) பல்லவர் கால, சோழர் கால ஓவியங்கள்
(4) இராச புத்திரரின் ஓவியங்கள்

**இசைக் கலை**

(1) தேவாரப் பண்ணிசை
(2) கர்நாடக சங்கீத மரபின் வளர்ச்சி தியாகராஜர், முத்துஸ்வாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள், சதாசிவ பிரம்மேந்திரர், சுவாதித் திருநாள் முதலியோர் மூலம் ஏற்பட்ட அபிவிருத்திகள்.

எனது எண் : **5/3/3/01/2025**
நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை, பத்தரமுல்லை.
2026.08.

இந்து அறநெறிப் பாடசாலை முதல்வர்களுக்கு,

**இந்து அறநெறிப் பாடசாலை சான்றிதழ்ப் பரீட்சை – 2026**
**விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்**

மேற்படி பரீட்சை தொடர்பாக 2026 ஆகஸ்ட் மாதம் மாதம் 14 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்படவுள்ள அறிவித்தல் மீதான தங்களது கவனத்தை ஈர்ப்பதுடன், விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்துகையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

02. விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்துவதற்கு முன்பாக அதன் இரண்டாம் பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ள அது தொடர்பான அறிவுறுத்தல்களை மிகக் கவனத்துடன் வாசித்து பூரணப்படுத்துவதுடன், விண்ணப்பப்படிவத்தில் அறநெறிப் பாடசாலை முதல்வர்களது கையொப்பம் மற்றும் பதவி முத்திரை இடப்படல் வேண்டும்.

03. விண்ணப்பப்படிவத்தில் தலைப்பு 3.0 இன் கீழ் உள்ள கூட்டில் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளின் மொத்த எண்ணிக்கையைக் குறிப்பிட வேண்டும். தலைப்பு 2.0 இன் கீழ் தங்கள் அறநெறிப் பாடசாலை வழங்கப்பட்டுள்ள ஆறு இலக்கங்களை உடையதான **<u>கணினி இலக்கம்</u>** குறிப்பிடப்படல் வேண்டும். (இவ்விண்ணப்பம் அனுப்பப்படும் கவரில் "SCH No" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது அவ்விலக்கமாகும்.) அறநெறிப் பாடசாலை தொடர்பான விசாரணைகளுக்கு இக் கணினி இலக்கத்தைக் குறித்து வைத்துக் கொள்ளவும்.

04. வெளியக பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சைக்கு விண்ணப்பிக்க இடமளிக்கப்பட மாட்டாது. தங்களது வதிவிடத்திற்கு அருகாமையிலுள்ள அறநெறிப் பாடசாலை மூலமாகவே விண்ணப்பித்தல் வேண்டும் என அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆதலால், உங்களது பிரதேசத்தில் எவரேனும் வெளியக பரீட்சார்த்தியொருவர் பரீட்சைக்குத் தோற்ற சந்தர்ப்பம் தரும்படி கேட்பின் அவரின் தகைமைகள் 2026 ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏற்புடையதென்பதை உறுதிப்படுத்திக் கொண்டு, பரீட்சைக் கட்டணத்தை அறவிட்டு, தங்களது அறநெறிப் பாடசாலையினூடாக விண்ணப்பிப்பதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்க வேண்டுமென்பதை விஷேடமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

05. முதல் முறையாக பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுவர். இரண்டாவது அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் தோற்றும் பரீட்சார்த்திகள், மற்றும் அனைத்து வெளியகப் பரீட்சாத்திகளும் பரீட்சை கட்டணமாக ரூபா 200.00 இனை செலுத்துதல் வேண்டும். **விண்ணப்பப்படிவத்தில் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டிய பரீட்சார்த்திகளுக்கான முழுத் தொகைக்குரிய கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு இலக்கம் 20-03-02-13 இற்கு வரவு வைக்கப்படுமாறு** <u>நாட்டின் எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திலும் பணம் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச் சீட்டை விண்ணப்பப்படிவத்தின் மறுபக்கத்தில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்பிரதியொன்றை பெற்று தங்களது பொறுப்பில் வைத்துக் கொள்ளவும். முத்திரை அல்லது காசுக்கட்டளை மூலமாக பரீட்சைக் கட்டணங்கள் செலுத்தலாகாது.</u>

06. தங்களது அறநெறிப் பாடசாலை் பரீட்சைக்கு தோற்ற உண்மையிலேயே ஆர்வமாகவுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் விண்ணப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறும் விண்ணப்பங்களை பூரணப்படுத்தும்போது தங்களது முழுப்பெயர் மற்றும் ஏனைய விடயங்கள் சரியாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ளதா என்பது பற்றி உறுதிசெய்து கொண்டபின் விண்ணப்பப்படிவத்தில் தங்கள் கையொப்பத்தை இடுமாறும் விண்ணப்பதாரிகளை அறிவுறுத்தும்படி தயவுடன் அறியத்தருகின்றேன்.

07. விண்ணப்பப்படிவங்கள் இரு பிரதிகளாக பூரணப்படுத்தப்பட்டு <u>மூலப் பிரதி, **பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல.**</u> எனும் விலாசத்துக்கு இத்துடன் அனுப்பப்பட்டுள்ள உறையினுள் இட்டு 2026 செப்டம்பர் மாதம் 14 <u>ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.</u> இரண்டாம் பிரதியை <u>தம்வசம் வைத்துக் கொள்ளவும்.</u> <u>காலதாமதமான, அல்லது பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படுவதால் சரியான முறையில் விண்ணப்பப்படிவங்களை நிரப்பி குறித்த திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு</u> கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

08. முதல் முறையாக விண்ணப்பிக்கும் அறநெறிப் பாடசாலைகள் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்திருப்பதை உறுதிப்படுத்துவதற்காக உரிய ஆவணங்களின் சான்றுப்படுத்திய பிரதிகளை விண்ணப்படிவத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

சுஜீவ விஜேரத்ன,
பிரதிப் பரீட்சைகள் ஆணையாளர் (ஒழுங்கமைப்பு),
பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்காக.

ORIGINAL COPY

# Department of Examinations, Sri Lanka
## Hindu Dharmacharya Certificate Examination - 20....

(Carefully read the attached instructions before filling the application)

Complete this application form and send to the Department of Examinations, Sri Lanka

| | | | |
|---|---|---|---|
| 1.0 Name of the Dhamma School and address (In Block Capital Letters) ……………………… ……………………… ……………………… <br>1.1 Telephone Number (mobile)…………………… Fixed (landline) ……………………<br>1.2 District of Dhamma School (In Block capital letters) ………………………<br>1.3 District No: …………………… | 2.0 The computerized No. given to your Araneri School (School No. / SCH No.)<br>☐☐☐☐☐☐ | 3.0 Total No. of Candidates sitting for the examination<br>Tamil ☐<br>Total ☐ | 4.0 The city and the city no. applied for the examination. (As per town list given)<br>(a) 1st choice …………………… City No. ……………………<br>(b) 2nd choice …………………… City No. …………………… |

| 5.0 | 6.0 Name of clergy/ priests shall be entered first and the lay-candidates subsequently. Names should be written clearly in capital letters as in the birth certificate/clergy certificate | 7.0 National Identity Card No / valid Passport no./ valid driving license no. | 8.0 Medium (Sinhala – 2, Tamail – 3, English - 4 )Mention the relevant | 9.0 Gender (Male – 0/Female - 1 /) (Write the relevant no. only) | 10.0 Mobile Phone No. of applicant. | 11.0 Subjects applied (Mention the relevant subject no in the respective column) | | | | | 12.0 Examination fee paid (Rs) If an exam fee is not relevant to pay write "Free" | 13.0 Those who have applied to complete a referred subject | | 14.0 Signature of the Candidate |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Serial No. | Full name with Surname (Write in English capital letters)<br>Eg :- BALAKUMAR SINDUJA<br>MAHENDRAN LAXSHIKA<br>Each name should be started in a new line with the serial number accurately. In case a single line is insufficient, use the next line. | | | | | 01 – The Vedas and Agamas | 02 – Saints and Leaders of Religious Movements | 03 History of Saivism | 04 – The Twelve Thirumurais | 05 -The Art and Architecture of the Hindu Temple | | 13.1 Previous Index No. | 13.2 Year | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | Total | | | | | | | | | |

15.0 Commissioner General of Examinations,

I hear by certify that the above candidates will appear from this institution, they have completed the requirements provided under heading 4 of the rules and recommendation form, they signed in front of me, and the payment receipt no…………………………dated……………………………obtained subsequent to the payment of the full examination fee of Rs………………to……………………………post office, charged from……………………………candidates who shall pay the respective examination fee, is attached overleaf.

Date : ……………………… Name of the head of the institution : ……………………………………………… Signature of the head of institution : ………………………………

Place the official stamp

(For the information of the principal :- If you have to use more than one sheet of paper, please carry the number of Candidates carefully to the first page. The subjects should be marked with numbers only.)

**16** | Pay the money to the Post Office and get the receipt and paste it here. (Money orders are not accepted.)

## Instructions to Fill the Application Form

1.0 Please write the name of the Institution and the address clearly in Capital Letters.
- 1.1 Mention the permanent land phone number of the Institution and the mobile phone number of the head of the institution.
- 1.2 Write the District for which the institution belongs in English Capital letters.
- 1.3 Mention the District number for which the institution belongs.

2.0 Write down the Six-Figure Computerized number (School No / SCH NO) given to your Institution by the Department of Examinations, Sri Lanka, clearly in the relevant cages.

3.0 Mention the medium wise Total and the Total number of candidates who wish to sit for the examination in the relevant box. In case the application includes several pages, write the number of total candidates on the first page only.

4.0 As per the instruction form sent to you with this application, mention the towns and town numbers applied for. Mention with the respective town numbers, the most convenient town under (a) as the 1st choice and another town that can be used alternatively under (b) as the 2nd choice.

5.0 Mention the respective consecutive number as 01, 02, 03, ........ with respect to each name of the candidates included in the application form. Start from a new line when a new name is entered. When one form is not sufficient for the application, another similar form should be utilized and the consecutive numbers until the last candidate shall be mentioned accurately. Mention the total number of candidates for each subject in the cages provided under each form.

6.0 Names of clergy / Priests shall be entered first and the names of the lay - candidates shall be entered subsequently. Each candidate's name should be written in full according to the birth certificate/ clergy certificate in English capital letters. When a single line is not sufficient to enter a certain name, the next line can be utilized and keep in mind to mention the consecutive number of the respective name accurately. (See the examples provided in the relevant column.)

7.0 Mention either National Identity Card number, Valid Sri Lankan Passport number or Valid Sri Lankan Driving License number.

8.0 The medium to appear for the Examination in of case of Tamil enter number **3**

9.0 Gender shall be defined as follows: in of case male enter number **0** and in of case Female enter number **1**.

10.0 Write down the mobile phone number of each applicant.

11.0 Enter the relevant Subject number of applied subjects.

12.0 Examination fees: - Examination fee will not be charged from the applicants who apply for the examination for the first time. Such applicants shall mention "free" in the cage provided. Those who wish to complete a referred subject have to pay an Examination fee of Rs. 50/-. Those who applied for the second time afterwards for more than one subject shall pay an examination fee of Rs. 200/-. (Applicants whose names are not mentioned in the register of the school, shall pay an examination fee of Rs. 200/- Mention the amount of the examination fee in the cage provided in front of the name of each applicant.)

13.0 Complete the following information with respect to the candidates who have applied to complete the referred subject only.
- 13.1 Mention the index number of the year referred.
- 13.2 Mention the year of the Examination referred.

14.0 Give the Instructions to the applicants to sign after checking for the accuracy of their Names, NIC numbers, Subjects and other details.

15.0 Recheck whether the names, signatures, paid examination fees and other details are entered accurately and place the signature of the head of the institution (Principal) along with his/her name. Place stamp of the Institution in the space provided.

16.0 Attach the receipt obtained in the above (16) cage, subsequent to the payment of the entire examination fees made by all relevant candidates to a Post Office.

**16** | தபால் அலுவலகத்தில் பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும். **(காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)**

## விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

1.0 அறநெறிப்பாடசாலையின் பெயர், முகவரி ஆகியவற்றை தெளிவாக ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் எழுதவும்.
- 1.1 அறநெறிப்பாடசாலையின் நிரந்தர தொலைபேசி எண்ணையும் மறைப்பாடசாலைத் தலைவரின் செல்லிடத் தொலைபேசி எண்ணையும் குறிப்பிடவும்.
- 1.2 அறநெறிப்பாடசாலை அமைந்துள்ள மாவட்டத்தை ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் குறிப்பிடவும்.
- 1.3 அறநெறிப்பாடசாலை அமைந்துள்ள மாவட்ட இலக்கத்தையும் குறிப்பிடவும். (அறிவுறுத்தல் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளவாறு)

2.0 உங்கள் அறநெறிப்பாடசாலைக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள 6 இலக்கம் கொண்ட எண்ணை (பாடசாலை எண்/SCH No) உரிய கூட்டினுள் சரியாகக் குறிப்பிடவும்.

3.0 பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திற்கு ஏற்ப பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையையும், மொத்தப் பரீட்சாத்திகளின் எண்ணிக்கையையும் உரிய இடத்தில் குறிப்பிடவும். விண்ணப்பப்படிவங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பக்கங்களைக் கொண்டிருப்பின், விண்ணப்பதாரியின் மொத்த எண்ணிக்கையை முதலாவது பக்கத்தில் மாத்திரம் குறிப்பிடவும்.

4.0 இவ்விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்பட்டுள்ள அறிவுறுத்தல் படிவத்தில் உள்ளவாறு, விண்ணப்பிக்கும் நகரம், நகர இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிடவும். இங்கு மிகவும் அண்மையிலுள்ள நகரம் (a) கீழ் 1 ஆவது தெரிவாகவும், அதற்கு அடுத்து அண்மையிலான நகரத்தை (b) இன் கீழ் 2 ஆவது தெரிவாகவும், உரிய நகர இலக்கத்துடன் குறிப்பிடவும்.

5.0 விண்ணப்பப்படிவத்தில் உள்ளடக்கப்படும் ஒவ்வொரு விண்ணப்பதாரருக்குமான தொடர் எண் 01, 02, 03.... என குறிப்பிடவும். ஒவ்வொரு பெயரையும் புதிய வரியில் ஆரம்பிக்கவும். விண்ணப்பப்படிவம் போதாவிடின் மேலும் விண்ணப்பப்படிவங்களைப் பயன்படுத்தலாம், ஆனால் இறுதி விண்ணப்பதாரர் வரை தொடர் எண் பிழையின்றி குறிப்பிடப்படல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்தினதும் இறுதியில் உள்ள கூட்டினுள் அந்தந்தப் படிவத்திற்கான பாடங்களுக்காக உள்ள மொத்த விண்ணப்பதாரர்களினதும் எண்ணிக்கையைக் குறிப்பிடவும்.

6.0 மதகுருமாரின் பெயர் விண்ணப்பப்படிவத்தில் முதலாவதாகவும், பொதுநிலையினரை அதற்கு அடுத்தபடியாகவும் குறிப்பிடுவதோடு, ஒவ்வொரு விண்ணப்பதாரரினதும் பெயர் பிறப்புச் சான்றிதழில் / மதகுரு சான்றிதழில் உள்ளவாறு குறிப்பிடல் வேண்டும். அத்தோடு முழுப்பெயரை ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் குறிப்பிடவும். பெயரை எழுதும் போது ஒரு வரி போதாவிடின் அடுத்த வரியையும் பயன்படுத்தவும்.ஒவ்வொரு பெயருக்கும் உரிய தொடர் எண்ணை சரியாக எழுதவும். (தரப்பட்டுள்ள உதாரணத்தைப் பார்க்கவும்)

7.0 தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுப்படியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுப்படியாகும் வாகன அனுமதிப் பத்திர இலக்கத்தைக் குறிப்பிடவும்.

8.0 பரீட்சைக்கு தமிழ் மொழி மூலம் மாத்திரமே தோற்ற முடியும். அதற்காக இல. **3** இனை உட்படுத்தவும்.

9.0 பால் நிலையை குறிப்பிடுகையில் ஆண் ஆயின் இல **0** எனவும் பெண் ஆயின் இல **1** எனவும் இடப்படல் வேண்டும்.

10.0 ஒவ்வொரு விண்ணப்பதாரியினதும் செல்லிடத் தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிடவும்.

11.0 விண்ணப்பிக்கும் பாடத்தைக் குறிப்பிடுகையில், பாடத்திற்குரிய எண்ணையும் குறிப்பிடல் வேண்டும்.

12.0 பரீட்சைக்கான கட்டணத்தை அறவிடுதல்:
முதல் முறையாகத் தோற்றும் விண்ணபப்தாரிகள் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை அவ் விண்ணப்பதாரிகளின் கூட்டினுள் "விடுவிக்கப்பட்டுள்ளனர்" எனக் குறிப்பிடவும். நூன சித்தி பெற்ற பாடமொன்றைப் பூரணப்படுத்துவதற்காக விண்ணப்பிக்கும் ஒரு விண்ணப்பதாரி ரூ. 50 /- பரீட்சைக் கட்டணமாகக் செலுத்த வேண்டும். இரண்டாம் அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களில் தோற்றும் விண்ணப்பதாரி ஒருவர் ரூ. 200/- பரீட்சைக் கட்டணமாகச் செலுத்த வேண்டும். (அறநெறிப் பாடசாலையின் பெயர் பட்டியலில் பெயர் குறிப்பிடப்படாத விண்ணப்பதாரிகள் முதல் தடவை தோற்றும்போதும் முழுமையான பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.) ஒவ்வொரு விண்ணப்பதாரரினதும் பெயரின் எதிரே உரிய கூட்டினுள் பரீட்சை கட்டணத்தைக் குறிப்பிடுக.

13.0 நூன சித்தியை முழுமைப்படுத்த விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் கீழுள்ள விபரத்தைப் பூரணப்படுத்தவும்.
- 13.1 நூன சித்தி பெற்ற வருடத்தின் சுட்டெண்ணைக் குறிப்பிடவும்.
- 13.2 நூன சித்தி பெற்ற வருடத்தைக் குறிப்பிடவும்.

14.0 பெயர், அடையாள அட்டை இலக்கம், தோற்றும் பாடங்கள் ஆகிய அனைத்து விபரங்களையும் சரிபார்த்த பின்னர் கையொப்பத்தை இடுமாறு விண்ணப்பதாரர்களை அறிவுறுத்தி, கையொப்பத்தைப் பெறவும்.

15.0 விண்ணப்பதாரரின் பெயர், அவர்களின் கையொப்பம், செலுத்த வேண்டிய பரீட்சைக் கட்டணம் ஆகிய அனைத்து விபரங்களும் சரியாக உட்படுத்தப்பட்டுள்ளனவா என மீண்டும் பரீட்சித்துப் பார்த்து அறநெறிப்பாடசாலைத் தலைவர் கையொப்பமிட்டு தமது பெயரை குறிப்பிடவும். உரிய இடத்தில் பாடசாலை முத்திரை இடவும்.

16.0 பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய அனைத்து விண்ணப்பதாரிகளினதும் தொகையைப் பெற்றுக் கொண்டு அம் முழுப் பணத்தை தபால் அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை மேலே காட்டப்பட்டுள்ள (16) என்ற கூடடினுள் ஒட்டவும்.

# DISTRICT/ TOWN LIST

| District/ Town Number | District/ Town | மாவட்டம் / நகரம் |
|---|---|---|
| 01 | Colombo | கொழும்பு |
| 02 | Gampaha | கம்பஹா |
| 03 | Kalutara | களுத்தறை |
| 04 | Kandy | கண்டி |
| 05 | Matale | மாத்தளை |
| 06 | Nuwara Eliya | நுவரேலியா |
| 07 | Galle | காலி |
| 08 | Matara | மாத்தறை |
| 09 | Hambantota | ஹம்பாந்தோட்டை |
| 10 | Jaffna | யாழ்ப்பாணம் |
| 11 | Mannar | மன்னார் |
| 12 | Vavuniya | வவுனியா |
| 13 | Mullaitivu | முல்லைத்தீவு |
| 14 | Kilinochchi | கிளிநொச்சி |
| 15 | Batticaloa | மட்டக்களப்பு |
| 16 | Ampara | அம்பாறை |
| 17 | Trincomalee | திருகோணமலை |
| 18 | Kurunegala | குருநாகல் |
| 19 | Puttalam | புத்தளம் |
| 20 | Anuradhapura | அநுராதபுரம் |
| 21 | Polonnaruwa | பொலன்னறுவை |
| 22 | Badulla | பதுளை |
| 23 | Monaragala | மொனராகலை |
| 24 | Ratnapura | இரத்தினபுரி |
| 25 | Kegalle | கேகாலை |

# Department of Examinations, Sri Lanka

## Hindu Dharmacharya Certificate Examination - 20....

**SECOND COPY**

(Carefully read the attached instructions before filling the application)

Complete this application form and Keep at Araneri School

| 1.0 Name of the Dhamma School and address (In Block Capital Letters) | 2.0 The computerized No. given to your Araneri School (School No. / SCH No.) | 3.0 Total No. of Candidates sitting for the examination | 4.0 The city and the city no. applied for the examination. (As per town list given) |
|---|---|---|---|
| ………………………………<br>………………………………<br>………………………………<br>1.1 Telephone Number (mobile)…………………… Fixed (landline) ……………………<br>1.2 District of Dhamma School (In Block capital letters) ……………………<br>1.3 District No: …………………… | [ ] [ ] [ ] [ ] [ ] [ ] | Tamil [ ]<br>Total [ ] | (a) 1st choice …………………… City No. ……………………<br>(b) 2nd choice …………………… City No. …………………… |

| 5.0<br>Serial No. | 6.0 Name of clergy/ priests shall be entered first and the lay-candidates subsequently. Names should be written clearly in capital letters as in the birth certificate/clergy certificate<br>Full name with Surname (Write in English capital letters)<br>Eg :- BALAKUMAR SINDUJA<br>MAHENDRAN LAXSHIKA<br>Each name should be started in a new line with the serial number accurately. In case a single line is insufficient, use the next line. | 7.0 National Identity Card No / valid Passport no./ valid driving license no. | 8.0 Medium (Sinhala – 2, Tamail – 3, English - 4 )Mention the relevant | 9.0 Gender (Male – 0/Female - 1 /) (Write the relevant no. only) | 10.0 Mobile Phone No. of applicant. | 11.0 Subjects applied (Mention the relevant subject no in the respective column)<br>01 – The Vedas and Agamas | 02 – Saints and Leaders of Religious Movements | 03 History of Saivism | 04 – The Twelve Thirumurais | 05 -The Art and Architecture of the Hindu Temple | 12.0 Examination fee paid (Rs) If an exam fee is not relevant to pay write "Free" | 13.0 Those who have applied to complete a referred subject<br>13.1 Previous Index No. | 13.2 Year | 14.0 Signature of the Candidate |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | **Total** | | | | | | | | | |

15.0 Commissioner General of Examinations,

I hear by certify that the above candidates will appear from this institution, they have completed the requirements provided under heading 4 of the rules and recommendation form, they signed in front of me, and the payment receipt no……………………dated……………………obtained subsequent to the payment of the full examination fee of Rs………………to……………………post office, charged from……………………candidates who shall pay the respective examination fee, is attached overleaf.

Date : …………………… Name of the head of the institution : …………………………………… Signature of the head of institution : ……………………

Place the official stamp

(For the information of the principal :- If you have to use more than one sheet of paper, please carry the number of Candidates carefully to the first page. The subjects should be marked with numbers only.)

**16** — Pay the money to the Post Office and get the receipt and paste it here. (Money orders are not accepted.)

## Instructions to Fill the Application Form

1.0 Please write the name of the Institution and the address clearly in Capital Letters.
   1.1 Mention the permanent land phone number of the Institution and the mobile phone number of the head of the institution.
   1.2 Write the District for which the institution belongs in English Capital letters.
   1.3 Mention the District number for which the institution belongs.

2.0 Write down the Six-Figure Computerized number (School No / SCH NO) given to your Institution by the Department of Examinations, Sri Lanka, clearly in the relevant cages.

3.0 Mention the medium wise Total and the Total number of candidates who wish to sit for the examination in the relevant box. In case the application includes several pages, write the number of total candidates on the first page only.

4.0 As per the instruction form sent to you with this application, mention the towns and town numbers applied for. Mention with the respective town numbers, the most convenient town under (a) as the 1st choice and another town that can be used alternatively under (b) as the 2nd choice.

5.0 Mention the respective consecutive number as 01, 02, 03, ........ with respect to each name of the candidates included in the application form. Start from a new line when a new name is entered. When one form is not sufficient for the application, another similar form should be utilized and the consecutive numbers until the last candidate shall be mentioned accurately. Mention the total number of candidates for each subject in the cages provided under each form.

6.0 Names of clergy / Priests shall be entered first and the names of the lay - candidates shall be entered subsequently. Each candidate's name should be written in full according to the birth certificate/ clergy certificate in English capital letters. When a single line is not sufficient to enter a certain name, the next line can be utilized and keep in mind to mention the consecutive number of the respective name accurately. (See the examples provided in the relevant column.)

7.0 Mention either National Identity Card number, Valid Sri Lankan Passport number or Valid Sri Lankan Driving License number.

8.0 The medium to appear for the Examination in of case of Tamil enter number **3**

9.0 Gender shall be defined as follows: in of case male enter number **0** and in of case Female enter number **1**.

10.0 Write down the mobile phone number of each applicant.

11.0 Enter the relevant Subject number of applied subjects.

12.0 Examination fees: - Examination fee will not be charged from the applicants who apply for the examination for the first time. Such applicants shall mention "free" in the cage provided. Those who wish to complete a referred subject have to pay an Examination fee of Rs. 50/-. Those who applied for the second time afterwards for more than one subject shall pay an examination fee of Rs. 200/-. (Applicants whose names are not mentioned in the register of the school, shall pay an examination fee of Rs. 200/- Mention the amount of the examination fee in the cage provided in front of the name of each applicant.)

13.0 Complete the following information with respect to the candidates who have applied to complete the referred subject only.
   13.1 Mention the index number of the year referred.
   13.2 Mention the year of the Examination referred.

14.0 Give the Instructions to the applicants to sign after checking for the accuracy of their Names, NIC numbers, Subjects and other details.

15.0 Recheck whether the names, signatures, paid examination fees and other details are entered accurately and place the signature of the head of the institution (Principal) along with his/her name. Place stamp of the Institution in the space provided.

16.0 Attach the receipt obtained in the above (16) cage, subsequent to the payment of the entire examination fees made by all relevant candidates to a Post Office.

**16** — தபால் அலுவலகத்தில் பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும். **(காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)**

## விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

1.0 அறநெறிப்பாடசாலையின் பெயர், முகவரி ஆகியவற்றை தெளிவாக ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் எழுதவும்.
   1.1 அறநெறிப்பாடசாலையின் நிரந்தர தொலைபேசி எண்ணையும் மறைப்பாடசாலைத் தலைவரின் செல்லிடத் தொலைபேசி எண்ணையும் குறிப்பிடவும்.
   1.2 அறநெறிப்பாடசாலை அமைந்துள்ள மாவட்டத்தை ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் குறிப்பிடவும்.
   1.3 அறநெறிப்பாடசாலை அமைந்துள்ள மாவட்ட இலக்கத்தையும் குறிப்பிடவும். (அறிவுறுத்தல் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளவாறு)

2.0 உங்கள் அறநெறிப்பாடசாலைக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள
6 இலக்கம் கொண்ட எண்ணை (பாடசாலை எண்/SCH No) உரிய கூட்டினுள் சரியாகக் குறிப்பிடவும்.

3.0 பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திற்கு ஏற்ப பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையையும், மொத்தப் பரீட்சாத்திகளின் எண்ணிக்கையையும் உரிய இடத்தில் குறிப்பிடவும். விண்ணப்பப்படிவங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பக்கங்களைக் கொண்டிருப்பின், விண்ணப்பதாரியின் மொத்த எண்ணிக்கையை முதலாவது பக்கத்தில் மாத்திரம் குறிப்பிடவும்.

4.0 இவ்விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்பட்டுள்ள அறிவுறுத்தல் படிவத்தில் உள்ளவாறு, விண்ணப்பிக்கும் நகரம், நகர இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிடவும். இங்கு மிகவும் அண்மையிலுள்ள நகரம் (a) கீழ் 1 ஆவது தெரிவாகவும், அதற்கு அடுத்து அண்மையிலான நகரத்தை (b) இன் கீழ் 2 ஆவது தெரிவாகவும், உரிய நகர இலக்கத்துடன் குறிப்பிடவும்.

5.0 விண்ணப்பப்படிவத்தில் உள்ளடக்கப்படும் ஒவ்வொரு விண்ணப்பதாரருக்குமான தொடர் எண் 01, 02, 03.... என குறிப்பிடவும். ஒவ்வொரு பெயரையும் புதிய வரியில் ஆரம்பிக்கவும். விண்ணப்பப்படிவம் போதாவிடின் மேலும் விண்ணப்பப்படிவங்களைப் பயன்படுத்தலாம், ஆனால் இறுதி விண்ணப்பதாரர் வரை தொடர் எண் பிழையின்றி குறிப்பிடப்படல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்தினதும் இறுதியில் உள்ள கூட்டினுள் அந்தந்தப் படிவத்திற்கான பாடங்களுக்காக உள்ள மொத்த விண்ணப்பதாரர்களினதும் எண்ணிக்கையைக் குறிப்பிடவும்.

6.0 மதகுருமாரின் பெயர் விண்ணப்பப்படிவத்தில் முதலாவதாகவும், பொதுநிலையினரை அதற்கு அடுத்தபடியாகவும் குறிப்பிடுவதோடு, ஒவ்வொரு விண்ணப்பதாரரினதும் பெயர் பிறப்புச் சான்றிதழில் / மதகுரு சான்றிதழில் உள்ளவாறு குறிப்பிடல் வேண்டும். அத்தோடு முழுப்பெயரை ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் குறிப்பிடவும். பெயரை எழுதும் போது ஒரு வரி போதாவிடின் அடுத்த வரியையும் பயன்படுத்தவும்.ஒவ்வொரு பெயருக்கும் உரிய தொடர் எண்ணை சரியாக எழுதவும். (தரப்பட்டுள்ள உதாரணத்தைப் பார்க்கவும்)

7.0 தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுப்படியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுப்படியாகும் வாகன அனுமதிப் பத்திர இலக்கத்தைக் குறிப்பிடவும்.

8.0 பரீட்சைக்கு தமிழ் மொழி மூலம் மாத்திரமே தோற்ற முடியும். அதற்காக இல. **3** இனை உட்படுத்தவும்.

9.0 பால் நிலையை குறிப்பிடுகையில் ஆண் ஆயின் இல **0** எனவும் பெண் ஆயின் இல **1** எனவும் இடப்படல் வேண்டும்.

10.0 ஒவ்வொரு விண்ணப்பதாரியினதும் செல்லிடத் தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிடவும்.

11.0 விண்ணப்பிக்கும் பாடத்தைக் குறிப்பிடுகையில், பாடத்திற்குரிய எண்ணையும் குறிப்பிடல் வேண்டும்.

12.0 பரீட்சைக்கான கட்டணத்தை அறவிடுதல்:
முதல் முறையாகத் தோற்றும் விண்ணபப்தாரிகள் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை அவ் விண்ணப்பதாரிகளின் கூட்டினுள் "விடுவிக்கப்பட்டுள்ளனர்" எனக் குறிப்பிடவும். நூன சித்தி பெற்ற பாடமொன்றைப் பூரணப்படுத்துவதற்காக விண்ணப்பிக்கும் ஒரு விண்ணப்பதாரி ரூ. 50 /- பரீட்சைக் கட்டணமாகக் செலுத்த வேண்டும். இரண்டாம் அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களில் தோற்றும் விண்ணப்பதாரி ஒருவர் ரூ. 200/- பரீட்சைக் கட்டணமாகச் செலுத்த வேண்டும். (அறநெறிப் பாடசாலையின் பெயர் பட்டியலில் பெயர் குறிப்பிடப்படாத விண்ணப்பதாரிகள் முதல் தடவை தோற்றும்போதும் முழுமையான பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.) ஒவ்வொரு விண்ணப்பதாரரினதும் பெயரின் எதிரே உரிய கூட்டினுள் பரீட்சை கட்டணத்தைக் குறிப்பிடுக.

13.0 நூன சித்தியை முழுமைப்படுத்த விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் கீழுள்ள விபரத்தைப் பூரணப்படுத்தவும்.
   13.1 நூன சித்தி பெற்ற வருடத்தின் சுட்டெண்ணைக் குறிப்பிடவும்.
   13.2 நூன சித்தி பெற்ற வருடத்தைக் குறிப்பிடவும்.

14.0 பெயர், அடையாள அட்டை இலக்கம், தோற்றும் பாடங்கள் ஆகிய அனைத்து விபரங்களையும் சரிபார்த்த பின்னர் கையொப்பத்தை இடுமாறு விண்ணப்பதாரர்களை அறிவுறுத்தி, கையொப்பத்தைப் பெறவும்.

15.0 விண்ணப்பதாரரின் பெயர், அவர்களின் கையொப்பம், செலுத்த வேண்டிய பரீட்சைக் கட்டணம் ஆகிய அனைத்து விபரங்களும் சரியாக உட்படுத்தப்பட்டுள்ளனவா என மீண்டும் பரீட்சித்துப் பார்த்து அறநெறிப்பாடசாலைத் தலைவர் கையொப்பமிட்டு தமது பெயரை குறிப்பிடவும். உரிய இடத்தில் பாடசாலை முத்திரை இடவும்.

16.0 பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய அனைத்து விண்ணப்பதாரிகளினதும் தொகையைப் பெற்றுக் கொண்டு அம் முழுப் பணத்தை தபால் அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை மேலே காட்டப்பட்டுள்ள (16) என்ற கூடடினுள் ஒட்டவும்.

# DISTRICT/ TOWN LIST

| District/ Town Number | District/ Town | மாவட்டம் / நகரம் |
|---|---|---|
| 01 | Colombo | கொழும்பு |
| 02 | Gampaha | கம்பஹா |
| 03 | Kalutara | களுத்தறை |
| 04 | Kandy | கண்டி |
| 05 | Matale | மாத்தளை |
| 06 | Nuwara Eliya | நுவரேலியா |
| 07 | Galle | காலி |
| 08 | Matara | மாத்தறை |
| 09 | Hambantota | ஹம்பாந்தோட்டை |
| 10 | Jaffna | யாழ்ப்பாணம் |
| 11 | Mannar | மன்னார் |
| 12 | Vavuniya | வவுனியா |
| 13 | Mullaitivu | முல்லைத்தீவு |
| 14 | Kilinochchi | கிளிநொச்சி |
| 15 | Batticaloa | மட்டக்களப்பு |
| 16 | Ampara | அம்பாறை |
| 17 | Trincomalee | திருகோணமலை |
| 18 | Kurunegala | குருநாகல் |
| 19 | Puttalam | புத்தளம் |
| 20 | Anuradhapura | அநுராதபுரம் |
| 21 | Polonnaruwa | பொலன்னறுவை |
| 22 | Badulla | பதுளை |
| 23 | Monaragala | மொனராகலை |
| 24 | Ratnapura | இரத்தினபுரி |
| 25 | Kegalle | கேகாலை |